தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
கார்த்திகை 4, தாரண - திருவள்ளுவர் ஆண்டு 2035
2004 நவம்பர் 19, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவர் அயராது பாடுபட்டால் அவரைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

1. அறிவிப்பு

(அ) தேசிய ஒருமைப்பாடு தின உறுதிமொழி—பேரவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தேசிய ஒருமைப்பாடு தினத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலகப் பிரதான கட்டடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் உறுதிமொழி செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்.*

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்